1992 மார்ச் 30]

எடுத்த முடிவுகளை, மத்திய அரசினுடைய சுரங்க நிறுவனம் தலையிட்டு அதற்குப் பின்னாலே ஏற்பட்ட முடிவுகளையெல்லாம் தெளிவாகச் சொல்லியிருக்கின்றேன். இதற்கு நம்முடைய அரசு, நம்முடைய ஒப்பற்ற தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னாலே தான் அவர்கள் கூட வந்து இங்கே நம்முடைய முதல்வரவர்களிடத்திலே பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இன்றைக்கு ஒரு முனைப்பான நடவடிக்கை எடுத்து ஒரு புதிய திட்டத்தோடு அரசை அணுகியிருக்கிறார்கள் என்று சொன்னேன். ஆகவே, அவர்களுடைய புதிய திட்டத்தை நம்முடைய அரசு கவனமாகப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, அந்தப் பிரச்சினை முடிவுற்றதற்குப் பின்னாலே மாண்புமிகு உறுப்பினருடைய கேள்விக்குப் பதில் கிடைக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 389, திரு. வ. மு. சுப்பிரமணியம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

389—

கட்டுமான மேம்பாட்டுக் கழகங்கள் ஏற்படுத்துதல்.

* 1461. திரு. வ.மு. சுப்பிரமணியம் :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாடு அரசு கட்டுமான கழகம் போன்று ஊராட்சி ஒன்றியங்களிலும் 'கட்டுமான மேம்பாட்டுக் கழகங்கள்' ஏற்படுத்தி, படித்த வேலையில்லாத கிராமப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பளிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் கட்டுமான மேம்பாட்டுக் கழகங்கள் ஏற்படுத்த இயலாது.

திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் வருஷத்திற்கு ஒரு கோடிக்கு மேல் ஊரகத் துறை மூலமாகவும், பொதுப் பணித் துறை மூலமாகவும், நெடுஞ்சாலைத் துறை மூலமாகவும் ரோடு, சாலைகள், பாலங்கள், கட்டிடங்கள் என்று கட்டுமானப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இதை ஒப்பந்தக்காரர்களிடம் விடுவதைத் தவிர்த்து கிராமப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்ற முறையிலே இம்மாதிரி கட்டுமான மேம்பாட்டுக் கழகங்களை அமைத்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்து, அரசு இதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் நடைபெறுகிற பல்வேறு பணிகளில் ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கிற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்ற அடிப்படையில் பொறியியல் துறையிலே பட்டம் பெற்றிருக்கின்ற இளைஞர்கள், அதிலும் குறிப்பாகப் பெண்கள், இந்த வேலைகளைச் செய்வதற்கு ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கின்ற கிராமப்புற பகுதி மக்களோடு இணைந்து செயல்படுவதற்கு முன்வருவார்களேயானால் அதைப்பற்றிப் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு பரிசீலனை செய்து முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வ. மு. சுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒப்பந்தக்காரர்களுக்கு இந்த வேலைகளைக் கொடுப்பதன் மூலம் உரிய காலத்தில் அந்த வேலைகள் முடிக்கப்படாமல் தவிர்க்கப்படுகின்றன. ஆகையால் இந்தக் கட்டுமான மேம்பாட்டுக் கழகத்தை அமைப்பதன் மூலம் உரிய காலத்தில் இந்த வேலைகளெல்லாம் முடிவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற கட்டுமான மேம்பாட்டுக் கழகங்களை அமைப்பதன் மூலமாக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் நிர்வாகச் செலவு அதிகமாகச் செயல்படும் என்ற காரணத்தாலே, அந்தந்த கிராமப் பகுதிகளிலே வாழ்கின்ற மக்கள் அவர்களே இணைந்து முன் வந்து அந்தத் திட்டங்களைத் தாங்களே நிறைவேற்றிக் கொள்கிறோம் என்று அவர்களாகவே ஒரு குழு அமைத்து இந்த அரசுக்குத் தெரிவிக்க அவர்கள் முன்வருவார்களேயானால் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, அந்தத் திட்டங்கள்—தரமான திட்டங்களை விரைவாக முடிப்பதற்கு அரசு எல்லா முயற்சிகளையும் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 390. திரு. எம். ஆண்டி அம்பலம். மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

390—

தென் பிராந்திய குறைந்தபட்ச ஊதிய போர்டு அமைத்தல்.

* 6238 திரு. எம். ஆண்டி அம்பலம்:

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா: